**தம்புள்ள பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 22 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 27 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 792,350 பெறுமதியான கேட்டல் உபகரணங்கள் மூலதனமாக்கப்படல்லை. | மூலதனக் கணக்கு சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (ii) | திறைசேரி உண்டியல்களின் முதலீட்டுக்காக 2018 ஆம் ஆண்டிற்குரிய வட்டி வருமானமான ரூபா 587,700 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,916,949 தொகையாக இருந்த போதிலும் இயந்திர உபகரணங்கள் கணக்கில் | இயந்திர உபகரணங்களின் குறைந்த பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 478,354 ஆக காண்பிக்கப்பட்டமையினால் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,438,595 தொகை குறைவாகக் காண்பிக்கப்பட்டது. | | |
| (iv) | 05 செயற்திட்டங்களுக்குரிய வேலை கடன் கொடுத்தோராக ரூபா 2,196,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (v) | தம்புள்ள ஹோட்டல் பயிற்சிப் பாடசாலையின் கட்டிடத்தை திருத்தும் வேலைக்குரிய கடன் கொடுத்தோர் ரூபா 480,545 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன் கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |
| (vi) | 2018 ஆம் ஆண்டில் யூலை தொடக்கம் திசெம்பர் வரையான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,154,970 ஆக இருந்த போதிலும் ரூபா 3,806,920 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் என்பன ரூபா 3,348,050 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் சரி செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களின் மூலம் சரி செய்யப்படும். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 51,106,279 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா | உரிய மீதிகளின் வேறுபாட்டை இணக்கஞ்செய்து கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். | இந்த மீதி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

91,424,100 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

**(இ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற தொங்கல் கணக்கின் மீதி ரூபா 12,587,598 ஆக இருந்த போதிலும் இது தொர்பாக ஆராய்ந்து கணக்குகளில் தேவையான சீராக்கங்களைச் செய்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான சீராக்கங்களைச் செய்து தொங்கல் கணக்கு தீர்க்கப்பட வேண்டும். | சபை ஆரம்பம் முதல் களஞ்சிய பெறுவனவுகள் களஞ்சியக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் விநியோகிக்கும் கணக்கில் அகற்றப்படாமையின் காரணமாக களஞ்சிய மீதிக்குரிய பட்டோலைகள் தயாரிக்கப்படவில்லை. அந்த களஞ்சிய மீதி தொங்கல் கணக்காக காட்டப்பட்டுள்ளது. |

**(ஈ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | பெறவேண்டிய கணக்குகள் | | |
| (i) | ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக் கூற்றுக்களில் மாற்றம் இன்றி முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,005,495 கூட்டுத்தொகையான பெற வேண்டிய 06 கணக்கு மீதிகளின் பெறுமதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெறவேண்டிய மீதி அறவிடப்பட வேண்டும். | பொருத்தமான பிரகாரம் மீதியை அறவிடுவதற்கும் அறவிட முடியாத மீதியை பதிவழிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 722,552 செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட | செலுத்த வேண்டிய மீதி தீர்க்கப்பட வேண்டும். | இந்த மீதியைத் தீர்த்து வைப்பதற்கும் பொருத்தமான பிரகாரம் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| காலமாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும். |

**(உ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 73,108,172 பெறுமதியான 06 கணக்கு விடயங்களுக்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காயைவின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பட்டோலைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | | |
| (i) | விதி 71 | பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளுக்காக பி.எஸ்.27 படிவத்தின் பிரகாரம் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பி.எஸ்.27 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணி செல்லப்பட வேண்டும். | பி.எஸ்.27 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று 2019 ஆம் ஆண்டு முதல் பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | விதி 217 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ். 46 படிவத்தின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடொன்று | பி.எஸ்.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று பேணி செல்லப்பட வேண்டும். | பி.எஸ்.46 படிவத்தில் பதிவேடொன்று 2019 ஆம் ஆண்டு முதல் பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நாளதுவரையாகப் பேணிச்செல்லப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய வேலை நிறுத்திவைத்தல் பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாண த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | காலவதியான வைப்புக்களை வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 04/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அரசாங்கத்தின் நிறுவனங்களில் காப்புறுதி பூட்கையை பெற்றுக் கொள்ளும் போது போட்டியாளர் கூறுவிலை கோரி காப்புறுதி பூட்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2019 ஆம் ஆண்டில் காப்புறுதி செய்யும் போது கூறுவிலை கோரி காப்புறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,149,682 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,139,149 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,376,000 | 2,812,000 | 2,629,200 | 182,800 | 2,540,000 | 2,734,900 | 2,555,300 | 179,600 |
| (ii) | வாடகை | 2,300,000 | 2,315,000 | 2,317,060 | 1,032,099 | 1,717,500 | 2,070,000 | 1,926,666 | 1,187,493 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 17,050,850 | 17,339,150 | 17,001,898 | 337,251 | 14,350,000 | 16,099,792 | 15,186,165 | 922,026 |
| (iv) | ஏனைய வருமானம் | 503,550 | 327,500 | 246,500 | 81,000 | 175,000 | 153,000 | 445,050 | 25,800 |
| | மொத்தம் | 23,230,400 | 22,793,650 | 22,194,658 | 1,633,150 | 18,782,500 | 21,057,692 | 20,113,181 | 2,314,919 |

## 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது 131 முச்சக்கர வண்டிகளில் இருந்து ரூபா 91,700 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | முச்சக்கர வண்டி நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | முச்சக்கர வண்டி நிறுத்தும் இடங்கள் மற்றும் அளவுகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையான நிலைமையால் தீர்த்து வைத்து உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 நவம்பர் 31 ஆம் திகதி வரையில் 02 ஹொட்டல்களில் இருந்து 2018 ஆம் ஆண்டுக்காக வியாபார வரி அறவிடப்படவில்லை. | நிலுவை வியாபார வரி அறவிடப்பட வேண்டும். | உரிய ஹொட்டல்களின் நிதி அறிக்கை கிடைத்ததன் பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சீகிரிய வாகன தரிப்பிடத்தை வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பல வருட காலமாக அறவிடுவதற்கு காணப்பட்ட நிலுவை வாடகை பணம் ரூபா 1,044,160 ஆகும். | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | இந்த வாடகை தொடர்பாக தம்புள்ள மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வியாபார அனுமதிப்பத்திர கட்டணம் ரூபா 189,251 தொகை மற்றும் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 148,000 ஆக காணப்பட்டன. | நிலுவை அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட வேண்டும். | இந்த பணத்தை அறவிடுவதற்காக உரிய நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய முச்சக்கர வண்டி நிறுத்தும் இட வாடகை ரூபா 81,000 நிலுவையாக காணப்பட்டது. | முச்சக்கர வண்டி நிறுத்தும் இட வாடகை அறவிடப்பட வேண்டும். | முச்சக்கர வண்டி நிறுத்தும் இடங்கள் மற்றும் அளவுகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினையான நிலைமையால் தீர்த்து வைத்து உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 19 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்கள் தொடர்பாக விரைவாக உபவிதி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது வரையில் உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் உபவிதி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு மீளாய்வாண்டின் போது சபையினால் முறையான வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு இலக்குகள் அடையப்பட வேண்டும். | இதற்காக தேவையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அதற்காக நிதி ஏற்பாடு ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கெப் வண்டியொன்று விபத்துக்கு உட்பட்டமை தொடர்பாக நிதி பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விபத்துக்குப் பொறுப்பானவர் தீர்மானிக்கப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய பரிசோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | விபத்துக்கு உட்பட்ட பெகோ லோடர் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் காப்புறுதி நிறுவனத்திலிருந்து ரூபா 50,000 இழப்பீட்டு பணம் கிடைத்திருந்த போதும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டம் அறவிடப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் மிக விரையில் நிறைவேற்றப்படும். |
| (இ) | தம்புள்ள மாவட்ட நீதிமன்றத்தில் MR - 226 என்ற வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் சபை நிதியத்திலிருந்து ரூபா 292,069 தொகை செலுத்துவதற்கு ஏற்பட்டமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்கள் இனங்காணப்படவில்லை. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டம் அறவிடப்பட வேண்டும். | ஏற்பட்ட நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2018 இன் வருடாந்த பொருள் மெமையாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 389,195 பெருமதியான பொருட்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டம் அறவிடப்பட வேண்டும். | பற்றக்குறையான பொருட்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களை தீர்மானிப்பதற்காக பரிசோதனை அரம்பிக்கப்பட்டள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 10 பதவிகளில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் | காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) நிரந்தரமாக்கப்படாத பதவியணியினர் | | |
| 05 பதவிகளுக்கு உரிய 08 ஊழியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு 05 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் சேவை பிரமாணத்துக்கு உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக நிரந்தரமாக்கப்படவில்லை. | பொருத்தமான பிரகாரம் நிரந்தரமாக்கப் பட வேண்டும் | உரிய ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) ஊழியர் கடன் | | |
| பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) இடம் மாற்றலாகச் சென்ற, ஓய்வுபெற்றுச் சென்ற மற்றும் வேலை நிக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கூட்டு மொத்த கடன் மீதி ரூபா 199,129 ஆகும். | ஊழியர் கடனை அறவிட வேண்டும். | இந்த கடன் பணத்தை அறவிடுவதற்காக உரிய நிறுவன தலைவர்களுக்கு அறிவிக்கப்படும். |
| (ii) நீண்ட காலம் முதல் அறவிடுவதற்கு உள்ள 10 ஊழியர்களுக்கு உரிய ரூபா 32,847 தொகையான கடன் மீதி அறவிடப்படவில்லை. | ஊழியர் கடனை அறவிட வேண்டும். | இந்த கடன் மீதியை அறவிடுவதற்காக அந்த ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படவில்லை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 2,500,000 பெறுமதியான கெப் வண்டியொன்று நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த சொத்துக்களை பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபைக்கு சொந்தமான புலொக் கல் இயந்திரம், 2 கெப் வண்டிகள், ஒரு மோட்டார் சைக்கிள், கழிவுப் பொருள் வண்டி மற்றும் மகேந்திர கெப் வண்டி என்பன எந்தப் பயன்பாட்டுக்கும் எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டது. | பயன்பாட்டுக்கு எடுக்கப்பபடாத சொத்துக்கள் அகற்றப்பட வேண்டும். | இந்த இயந்திரங்கள் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) மாகாண குறித்தொதுக்க அபிவிருத்தி மானியம் மற்றும் பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தி ரூபா 7,982,385 பெறுமதியில் பூர்த்திசெய்யப்பட்ட பொது 03 பொது நூலக கட்டிடங்கள் எந்தப் பயன்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது மூடி வைக்கப்பட்டிருந்தது. | மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட வேண்டும். | இந்த நூலக கட்டிடங்கள் மிகக் கூடிய விரைவில் மக்களின் உரித்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான லொறி வண்டி ஒன்று 2018 திசெம்பர் 05 ஆம் திகதி எரிபொருள் பரீட்சிப்பின் போது அத்திகதியில் வாகனத்துக்கு பொறுப்பாக செயற்பட்ட சாரதியினால் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் மோசடி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். |